A

முதல் இடைப்பருவப் பொதுத் தேர்வு - 2023

பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

விலங்கியல்

நேரம்: 1.30 மணி *மதிப்பெண்கள்: 50*

பகுதி - I

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதவும்: 10×1=10

1. கரப்பான் பூச்சியின் பார்வையின் வகை .....
   அ) முப்பரிமாணம் ஆ) இருபரிமாணம்
   இ) மொசைக் ஈ) கரப்பான் பூச்சியில் பார்வை காணப்படுவதில்லை
2. நுமேட்டிக் (காற்றறை கொண்ட) எலும்புகள் காணப்படும் உயிரி
   அ) பாலூட்டிகள் ஆ) பறவைகள் இ) ஊர்வன ஈ) கடற்பஞ்சுகள்
3. தரத்தைப் பற்றி கருதாமல், வகைப்பாட்டின் ஒவ்வொரு அலகு ..... ஆகும்.
   அ) டாக்சான் ஆ) வகை இ) சிற்றினம் ஈ) ஸ்ட்ரெயின்
4. கால்களற்ற இருவாழ்வி .....
   அ) இத்தியோஃபிஸ் ஆ) ஹைலா
   இ) ரானா ஈ) சலமான்டர்
5. இணைப்புத்திசுவின் தளப்பொருளில் காணப்படும் நாரிழை யாது?
   அ) கொலாஜன் ஆ) ஏரியோலார் இ) குருத்தெலும்பு ஈ) குழல்வடிவ நாரிழை
6. தவளையின் சிறுநீரகம் .....
   அ) ஆர்க்கிநெஃப்ரால்ஸ் ஆ) புரோநெஃப்ரால்ஸ்
   இ) மீசோநெஃப்ரால்ஸ் ஈ) மெட்டாநெஃப்ரால்ஸ்
7. கீழ்க்காண்பவைகளில் எது முட்டையிடும் பாலூட்டி .....
   அ) டெல்ஃபினஸ் ஆ) மேக்ரோபஸ் இ) ஆர்னிதோரிங்கஸ் ஈ) ஈகுவஸ்
8. கீழ்காண்பவைகளில் எது சமதரத்தில் இல்லை .....
   அ) பிரைமேட்டா ஆ) ஆர்த்தோப்டீரா இ) டிப்டிரா ஈ) இன்செக்டா
9. சிட்டுக்குருவிகள் அழிந்துவரும் விலங்கினப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதால் அதனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ..... உலகச்சிட்டுக்குருவி தினமாக கொண்டாடப்படுகிறது.
   அ) மார்ச் 20 ஆ) ஏப்ரல் 20 இ) ஆகஸ்ட் 20 ஈ) மே 20
10. மண்புழுவின் இரு சொல் பெயர் .....
    அ) பெரிப்ளனெட்டா அமெரிக்கானா ஆ) லாம்பிட்டோ மாரிட்டீ
    இ) ரானா ஹெக்ஸாட்டேக்டைலா ஈ) நாஜா நாஜா

பகுதி - II

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.
வினா எண் 14க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 5×2=10

11. ஜோகரன்ஸ் சின்ட்ரோம் என்றால் என்ன?
12. சுடர் செல்கள் என்றால் என்ன?

13. மண்புழுக்களில் கய கருவுறுதல் நடைபெறுவதில்லை. ஏன்?
14. ஆண் தவளை, பெண் தவளை - இடையே உள்ள வேறுபாடுகள் எழுதுக.
15. கரப்பான் பூச்சியின் வகைப்பாட்டு நிலையை எழுதுக.
16. சிற்றினங்களைக் கண்டறியும் தானியங்கி கருவிகள் ஏதேனும் இரண்டினை குறிப்பிடுக.
17. முப்பெயரிடும்முறை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.
வினா எண் 19க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **5×3=15**

18. பேருலகு ஆர்க்கியா பற்றி குறிப்பு எழுதுக.
19. மண்புழுவில் காணப்படும் மூன்று நெஃப்ரீடியாக்களின் வகைகளை குறிப்பிடுக.
20. கரப்பான் பூச்சியின் செரிமான மண்டலம் பாகங்களுடன் படம் வரைக.
21. பயாப்சி மற்றும் ஆட்டாப்சி வேறுபடுத்துக.
22. மீன்களில் காணப்படும் காற்றுப் பைகளின் பண்புகள் பற்றி எழுதுக.
23. தவளைகளின் பொருளாதார முக்கியத்துவம் குறித்து எழுதுக.
24. பாலூட்டிகளில் காணப்படும் பண்புகள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கு விடையளி. **3×5=15**

25. அ) பெயரிடுவதற்கான அடிப்படை விதிகள் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) மனிதனின் வகைப்பாட்டு படிநிலையை எழுதுக.

26. அ) தொகுதி கணுக்காலிகள் பற்றி எழுதுக. ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

(அல்லது)

ஆ) முதுகு நாணுடையவை மற்றும் முதுகு நாணற்றவை பண்புகளின் ஒப்பீடு எழுதுக.

7. அ) மண்புழுவின் வாழ்க்கை சுழற்சியை படத்துடன் விளக்குக.

(அல்லது)

ஆ) ஆண் மற்றும் பெண் கரப்பான் பூச்சிகளுக்கான வேறுபாடுகள் அட்டவணைப்படுத்துக.
